ஸ்ரீ தந்வந்த்ரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

பரிதாபி
சித்திரை

MAY
1972

தொகுதி 34
பகுதி 5

Vol. 34
No. 5

ஆசிரியர் & பிரசுரகர்த்தா :
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

இன்றைய சூழ்நிலையில் பாடதிட்டம் ... 85
தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம் ... 88
ஆரோக்கிய கல்பத்துருமம் ... 89

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered THE ARYA VAIDYA SALA KOTTAKAL Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம்		போன் நெ. 44
தலைமை வைத்யர்		போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு)	போன் நெ 27
	(ஆபீஸ்)	போன் நெ 61
மானேஜர்	(வீடு)	போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு:—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்

பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202.

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்

∴

பிரஸவித்த மாதர்கட்கு :

ஸௌபாக்கிய ரஸாயனம்

ஜீர்ண சக்தி, ரத்த விருத்தி அளிக்கும் சிறந்த லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

பயஸ்யா

தாய்ப்பாலை வளர்க்கும் திவ்ய ரஸாயன லேஹியம்.

300 கிராம் பாட்டில் ரூ. 5.

— தபால் செலவு தனி —

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில்
தயாரிக்கப் பெற்ற
மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும்
இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram: KALIA

Phone: Office - 3232
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி: KALIA

போன்: ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்"   P. B. No. 1382.   போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD.
AVP

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1.	23 B, பூஸா ரோடு, புது டில்லி :	போன் ;	585687
2.	மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1	,,	2984
3.	கௌடியா மடத்தெரு, மதராஸ்-14	,,	85752
4.	வளிஞ்ஞம்பலம், எர்ணுகுளம், கொச்சின்-18	,,	32219
5.	பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1	,,	92
6.	மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1	,,	195
7.	கடைவீதி, பொன்னனி	,,	41
8.	ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1	,,	378
9.	கோர்ட் ரோடு, ஆலத்தூர்	,,	87
10	மெயின் ரோடு, கஞ்சிக்கோடு		
11.	ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18	,,	33758
12	இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2	,,	4891
13.	T. T. 384 K. டெலிச்சேரி ரோடு, கண்ணனூர்-2		
14.	No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னனி)		

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களையும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினால் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளையும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலைவலி முதலிய கோளாறுகளையும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினால் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலை 25 ML ரூ. 7-00; 12 ML. ரூ 3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்கள்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் நிறுவப்பட்டது.]

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 34	பரிதாவி சித்திரை	பகுதி 5
Vol. 34	1972 மே	No. 5

॥ श्री धन्वन्तरये नमः ॥

இன்றைய சூழ்நிலையில் பாட திட்டம்

இந்தியாவில் ஆயுர்வேதம் வளரத்தக்க சூழ்நிலையை அமைக்கும் பொறுப்பு இன்று மத்திய இந்திய வைத்யக் கவுன்ஸிலிடம் அமைந்துள்ளது. அதன் தலைவர் பண்டிட் சிவசர்மா அவர்கள் தனது வாழ்நாளில் பெரும் பகுதியில் இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்துவதற்காக உழைத்தவர். அவரிடமும் அவரது சகாக்களிடமும் அந்த வாய்ப்பு வந்திருப்பது மிகவும் பொருத்தமே.

வளர்ச்சி திட்டத்தில் முதல் பணி கல்வியை முறையாக அமைப்பது. பாட திட்டமும் பாட திட்டத்திற்கேற்ப பாட புத்தகங்கள் எழுதுவதும் கல்வித்துறையில் முதல் இடம் பெறும். கல்வி அமைப்பு பற்றி யோசித்துத் திட்டங்கள் அமைக்கத் தனித்த குழு இயங்கி வருகிறது.

கல்வி திட்ட அமைப்பு மிகவும் கடுமையான பிரச்னை. இன்று ஆயுர்வேதத்தின் தலையெழுத்தை நிர்ணயிக்கவிருக்கும் இந்தக் குழுவினருக்கும் அந்தக் கல்வியை பெறவிருக்கும் மாணவருக்கும்

இடையே கால அளவில் ஒரு தலைமுறை இடைவெளியுள்ளது மனத்தளவில் பல தலைமுறைகளுக்கான இடைவெளி இருப்பதாகக் கொள்ளலாம். ஆயுர்வேதக் கல்வியில் ஸம்ஸ்கிருதத்தின் பயிற்சி, நியாய வைசேஷிக தர்சனங்களின் அடிப்படை அறிவு, இதர வைத்யக் கலப்படமின்றி சுத்தமாக போதனை, சல்யம் முதலிய இதர அங்கங்களின் பயிற்சி பற்றிய தேவையுணர்ச்சி இல்லாமலேயே போதித்தல் முதலியவைகளில் ஆழ்ந்த பற்றுள்ள கல்வி திட்ட அமைப்பாளர்களுக்கும், ஸம்ஸ்கிருதப் பற்றின்மை, தேசபாஷையின் பயிற்சி, நவீன நாகரிகத்தில் ஈடுபாடு, பிராசீன தர்சனங்கள் சுவைக்குதவாமலிருப்பவைகளாயிருப்பதால் அவைகளைக் கற்பதில் பார உணர்ச்சி, போட்டி மனப்பான்மையுடன் முன்னேறும் லக்ஷ்யமும் லோகாயத மனப்பான்மையும் அவசியமுள்ள காலத்தில் இருப்பதால் பிரமிப்பூட்டும் நவீன விஞ்ஞானத்திலும் அதன் அடிப்படையில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளரும் நவீன வைத்யத்தில் ஈடுபாடு என்று முற்றிலும் மாறுபட்ட நோக்குள்ள மாணவர் உலகத்திற்கும் இடையே பாலமாக இக்கல்வி திட்டம் அமையவேண்டும்

தமிழ் நாட்டிலும் மற்ற இடங்களிலும் இந்திய வைத்யம் பயிலும் மாணவர்களின் கோரிக்கைக்கு அனுகுணமாகப் பாட திட்டம் அமையாவிடில் மாணவர் பஞ்சம், அதிருப்தி, ஆயுர்வேதத்தில் ஈடுபாடற்ற ஆனால் ஆயுர்வேதத்தில் பூர்ண அதிகாரம் பெற உரிமையுள்ள ஒரு சமுதாயம் உதயமாவது என்ற சூழ்நிலை ஏற்படும். தீர்க்க தரிசனத்துடன் அவர்கள் திட்டம் வகுப்பதால் தான் ஆயுர்வேதம் வளர முடியும்.

சித்தவைஷம்யமின்றி, விருப்பு வெறுப்பின்றி தேசச் சூழ்நிலையையும் மாணவர் நலனையும் ஆயுர்வேதத்தின் நலனையும் பொது மக்களின் மருத்துவ சேவை நலனையும் சேர்த்து யோசித்துத் திட்டமாக்கவேண்டும். சுத்த ஆயுர்வேதம், மிச்ர ஆயுர்வேதம் என்ற அடிமுதல் காண முடியாத அசட்டுக் கொள்கைகள் மறைந்து கோஷ்டி மனப்பான்மைக்கிடமில்லாமல், ஸமத்ருஷ்டி உள்ள சரகரும் ஸுச்ருதரும் சென்ற வழியில் ஆயுர்வேத வளர்ச்சிக்குப் பாடுபடவேண்டும்.

"ஸுமஹத், யசஸ்வி, தீரபுருஷாஸேவிதம், அர்த்தபஹுலம், ஆப்தஜநபூஜிதம், த்ரிவிதசிஷ்யபுத்திஹிதம், அபகதபுநருக்த தோஷம், ஆர்ஷம், ஸுப்ரணீத ஸூத்ரபாஷ்ய ஸங்க்ரஹக்ரமம், ஸ்வாதாரம், அநவபதிதசப்தம், அகஷ்டசப்தம், புஷ்கலாபிதாநம், க்ரமாகதார்த்தம்,

அர்த்ததத்வ் விநிச்சயப்ரதானம், ஸங்கதார்த்தம், அஸங்குலப்ரகரணம், ஆசுப்ரபோதகம், லக்ஷணவச்ச உதாஹரணவச்ச ததபிப்ரபத்யேத சாஸ்த்ரம்.''

என சரகர் கூறியபடி பாட புத்தகங்களை த்ரிவித புத்தி சிஷ்ய ஹிதமாக அமைக்கும் பொறுப்பை இந்தக் குழு ஏற்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளது திட்டங்கள் அமுலானபின் குற்றங் குறைகள் கண்டு பிடிக்கப்பெறுவதைவிட அவ்வப்போது சில வைத்திய பிரமுகர்கள் அல்லது சங்கங்களுக்காவது அனுப்பி கருத்தறிந்து முடிவு செய்வதும் மிகவும் அவசியமானதே.

———

அங்கத்தினர்கள் கவனிக்க

———

மஹாமண்டல நிர்வாஹ ஸமிதிக் கூட்டத்தில் தீர்மானித்த படி இவ்வாண்டிலிருந்து மஹாமண்டல அங்கத்தினர்களுக்கு ஒரு அங்கத்தினர் அத்தாட்சிப் பத்திரம் அளிக்க ஏற்பாடாகி வரு கிறது. அங்கத்தினர்களாக உள்ளவர்களின் விசேஷ யோக்கி யதை, பட்டம், அனுபவம் முதலிய விபரங்களை அதில் குறிப்பிடும் நோக்கத்துடன் ஒரு விண்ணப்பப் பத்திரம் இந்த மாத சந்திரிகை யுடன் சேர்த்து அனுப்பப்பெற்றுள்ளது இதைப் பூர்த்தி செய்து 20-5-72க்குள் காரியாலயத்திற்கு வந்து சேரும்படி இவ்வாண்டுச் சந்தா ரூபாய் ஐந்தையும் அத்தாட்சி பத்திர கட்டணம் ரூபாய் இரண்டையும் சேர்த்து அனுப்பவேண்டும். அங்கத்தினர்கள் தரும் விபரத்தை அத்தாட்சி பத்திரத்தில் குறிப்பிட்டு ஜூன் முதல் வாரத்திற்குள் அனுப்பப்பெறும் விண்ணப்பபத்திரம் பூர்த்திசெய்து சந்தாவுடன் இதற்கான தனிக்கட்டணம் அனுப்பிய வர்களுக்கு மட்டுமே அத்தாட்சிப்பத்திரம் அனுப்பிக்கப்பெறும். இம்மாத முடிற்விகுள் சந்தா அனுப்பாதவர்கட்கு, ஜூன் மாத வைத்திய சந்திரிகை வி பி. தபால் மூலம் அனுப்பிவைக்கப்பெறும்.

A. ராகவ ராவ்,

பொதுக் கார்யதர்சி.

தமிழ்நாடு ஆயுர்வேத மகாமண்டலம்

அவசர நிர்வாஹ ஸமிதிக் கூட்டம்

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் அவசர நிர்வாஹ ஸமிதிக்கூட்டம் 30—4—72 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திருச்சி, 31-A, சின்னக்கடைத்தெரு திருச்சி ஆயுர்வேதிக் யூனியன் கட்டிடத்தில் நடைபெற்றது மண்டலத் தலைவர் ஸ்ரீ T. S. ஈச்வரன் அவர்கள் தலைமை வகித்தார். கோவை ஸ்ரீ P. V. ராம வாரியர், மதுரை ஸ்ரீ N. ராமவாரியர், ஸ்ரீ P. V. ராகவ வாரியர் இவர்களிடமிருந்து கடிதங்கள் வரப்பெற்றன. ஆலோசிக்கப் பட்ட விஷயங்களாவன :

1. நமது மஹா மண்டலம்-வைத்ய சந்திரிகை-அபிவிருத்தி-மஹா மண்டல அங்கத்தினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன், மே மாதக் கடைசிக்குள் எல்லா அங்கத்தினர்களுக்கும், அங்கத்தினர் அத்தாட்சி பத்திரம் அவரவர்களின் யோக்யதை முதலியவைகளின் குறிப்புடன் விநியோகிப்பதாகத் தீர்மானிக்கப்பெற்றது. அத்தாட்சிப் பத்திரத்திற்குத் தனியாக கட்டணம் ரூ 2/- (ரூபாய் இரண்டு) வஸூலிக்கத் தீர்மானிக்கப் பெற்றது. அத்தாட்சி பத்திரம் பிரதி வருஷம் கட்டணம் பெற்று புதுப்பிக்கப்பெறும்.

2. அகில இந்திய ஆயுர்வேத மஹா ஸம்மேளனம் வித்யா பீடம் - தலைவர் பதவி - பெயர்களை சிபார்சு செய்தல் :—

(a) அகில இந்திய ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்திற்குத் தலைவராக அடியிற் கண்டவர்கள் சிபார்சு செய்யயப் பட்டனர்.

1. ஸ்ரீ பண்டிட் சிவசர்மா, பம்பாய்
2 ,, A. T. சர்மா, பர்ஹாம்பூர்
3. ,, Y. பார்த்த நாராயண பண்டிட், பங்களூர்
4 ,, V. B. நடராஜ சாஸ்திரீ, திருச்சி
5 ,, A ராகவ ராவ், திருச்சி

(b) அகில இந்திய ஆயுர்வேத வித்யாபீடத்திற்குத் தலைவராக அடியிற்கண்டவர்கள் சிபார்சு செய்யப் பட்டனர்

1. ஸ்ரீ கேசவ பிரஸாத் ஆத்ரேய, டில்லி
2. ,, ஹரிதத்த சாஸ்திரீ, புது டில்லி
3. ,, ஸீதாராம மிச்ரா, ஜய்ப்பூர்
4. ,, A. ராகவராவ், திருச்சி
5. ,, V. B. நடராஜ சாஸ்திரீ, திருச்சி

ஆரோக்கிய கல்பத்துருமம்

விஸர்ப்ப சிகித்ஸை

ரஸால விஸர்ப்பம்

மாம்பூ போன்ற உருவுடன் உள்ள கொப்புளங்களோடு மாவிலை போன்ற நிறத்தில் ஏற்படும் தடிப்புடனிருக்கும்.

சிகித்ஸை: நால்பாமர (ஆல், அத்தி, இச்சி, அரசு)ப் பட்டையைக் காயவைத்து இடித்து தயிர் தெளிவிலோ தேங்காய் பாலிலோ ஊரவைத்து அரைத்து மேல் பூசவும். மஞ்சள், பேய்த் தும்மட்டிவேர், பிரமி, கொன்னைவேர்பட்டை, கோரைக்கிழங்கு, செங்கழுநீர் கிழங்கு இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம். தேள்கொடுக்குவேர், சிற்றுமுட்டிவேர், பேரா முட்டிவேர், நன்னாரிவேர், மஞ்சள், மரமஞ்சள், பேய்ப்புடல் இவைகளின் கஷாயம் தேனும் சர்க்கரையும் சேர்த்து சாப் பிடலாம்.

த்ரோணதூர்வாதி தைலம்: கருந்தும்பை, அருகம்புல், தண் ணீர்விட்டான் கிழங்கு, கருசலாங்கண்ணி, பச்சை நெல்லிக்காய், சீந்திற்கொடி இவைகளின் சாறு; கோரைக்கிழங்கு, சரளதேவ தாரு, அதிமதுரம், திரிபலை, தேவதாரு, சந்தனம், ஏலரிசி, கோஷ்டம், வெட்டிவேர், விலாமிச்சைவேர், கச்சோரம் இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்; இதைத் தைலமாகக் காய்ச்சிக்கொள்ளவும். மஞ்சிட்டி, நன்னாரி, கோரைக்கிழங்கு இவைகளின் தூளுடன் கலந்த நால்பாமரப் பட்டை போட்டுத் தயாரித்த வென்னீரில் குளிக்கவும்.

ஜடில விஸர்ப்பம்

ஒரு நரம்பைத் தொடர்ந்து கருஞ்சிவப்பு நிறமுள்ள வீக்கம் மெல்லியதாகவும் நீண்டும் காணும். நாயுருவி விதை போல சினப்புகள் நிரம்பியிருக்கும். தலை குனிவு, ஹிருதயம் கை கால் இவைகளில் எரிச்சல், வலி இருக்கும். தொண்டை கம்மலாக இருக்கும்.

சிகித்ஸை: சினப்புள்ள இடங்களில் நெய் தடவி, நீர்முள்ளித் தோலையும் செம்பரத்தை வேரையும் தயிர் தெளிந்த நீர் விட்டரைத்துக் குழப்பி மேல் பூசி வரவும். விலாமிச்சைவேர்,

அதிமதுரம், வெள்ளெருக்கு வேர், மரமஞ்சள் தோல், கருங்காலி வைரம், கோரைக்கிழங்கு, பேய்புடல் இவைகளைக் கஷாயம் வைத்து தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிடலாம் மர மஞ்சள்தோல், ஆடாதோடைவேர், கோரைக்கிழங்கு, புத்தரிச் சுண்டைவேர் பட்டை, வேப்பம்பட்டை, வேங்கை வைரம், மருதம் பட்டை, நன்னாரிவேர், விலாமிச்சைவேர் இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடவும்

வத்ஸாதன்யாதி தைலம்: சீந்திற்கொடி, குருந்தோட்டிவேர், அதிமதுரம், தண்ணீர்விட்டான்கிழங்கு இவைகளின் கஷாயம்; கோரைக் கிழங்கு, மஞ்சிட்டி, ஏலரிசி லவங்கப்பட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ, கச்சோரம் இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் இவைகளைத் தைலமாகக் காய்ச்சித் தலைக்குத் தேய்க்கவும். அஷ்டவல்க தைலம் கழுத்திற்குக் கீழ் தேய்த்துக்கொள்ளவும். ஸ்நானம் செய்ய – விருச்சி இலை, தூணி யாங்கம் இவைகளைப் போட்டுத் தயாரித்ததோ, நால்பாமரப் பட்டை வென்னீர் இவை இட்டுத் தயாரித்ததோ, ஆன வென்னீர் நல்லது.

கண்டகி விஸர்பம்:

மூன்று நாட்கள் தொடர்ந்து ஜ்வரம், எல்லா சந்திகளிலும் வீக்கம்; வீக்கத்தில் முள்முனை போன்ற சினப்புகள் இத்துடன் கூடியது கண்டகியாகும்.

சிகித்ஸை: பேரால் பட்டையை உலர்த்தி தேங்காய்ப்பால் விட்டு அரைத்து மேல் பூசலாம். அல்லது வெம்பாடம்பட்டை, அரளிப்பூ இவைகளைத் தயிர்த்தெளிவில் அரைத்துத் தேய்க்க லாம். கடுக்காய்க்கொட்டையின் உள் விதை, விருச்சிவேர் மேல் பட்டை இவையையும் தயிர் தெளிவில் அரைத்துப் பூசலாம். கார்போகரிசி, ஆடாதோடை வேர், கோரைக்கிழங்கு, கருஞ் சீரகம், அதிமதுரம், சந்தனம் கும்மட்டிவேர், சீந்திற்கொடி, சிறு காஞ்சூரிவேர், பாலைப்பட்டை இவைகளைக் கஷாயம் வைத்துத் தேனும் சர்க்கரையும் கூட்டிச் சாப்பிடலாம். அல்லது நன்னாரி வேர், கோரைக்கிழங்கு, நால்பாமரப்பட்டை, ஏலரிசி, லவங்கப் பட்டை, பச்சிலை இவைகளைக் கஷாயமாக்கித் தேனும் சர்க் கரையும் சேர்த்துக்கொடுக்கலாம்.

ஐலேயகாதி தைலம்: முக்காப்பீரகத்திலை, இலுப்பையிலை, வெட்டி இலை, அவுரி இலை இவைகளின் சாறு; அதிமதுரம், பெருங்குரும்பைவேர், கோரைக்கிழங்கு, கண்டங்கத்திரி வேர்,

கச்சூரக்கிழங்கு, சந்தனம், ஏலரிசி, லவங்கப்பட்டை, பச்சிலை, சிறுநாகப்பூ இவைகளை அரைத்துக் கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய் இவைகளைத் தைலமாக்குக. தலைக்குத் தடவ நல்லது திரிபலையை கஷாயமாக்கி, அதையே அதில் அரைத்துக் கல்கமாகக் கலக்கித் தைலம் காய்ச்சித் தேய்த்துக்கொள்ளலாம்.

அச்வத்த வல்காதி தைலம்: அரசம்பட்டை, கொன்னைப் பட்டை, அதிமதுரம், சிவனார் வேம்பு இவைகளின் கஷாயம்; மஞ்சிட்டிப்பொடி, விலாமிச்சைவேர், வெட்டிவேர், கோரைக் கிழங்கு, அதிமதுரம், கோஷ்டம், சந்தனத்தூள் இவை கல்கம்; தேங்காய் எண்ணெய் அல்லது நல்லெண்ணெய்; இதைத் தைல மாக்கி உடம்பிற்குத் தேய்த்து ஸ்னானம் செய்ய நல்லது. அஷ்டவல்க தைலமும் நல்லது.

ஸ்நானம் செய்ய முள் முருங்கையிலை, மரமஞ்சள், நெல்லி முள்ளி இவைகளைப் போட்டு வென்னீர் தயாரித்துக்கொள்ளலாம்.

பிந்துமாலிகா விஸர்ப்பம்

ஆரம்பத்தில் ஜ்வரம். சிவந்து நன்கு உட்புறம் வியாபித்து மேல்புறம் மெல்லியதாகச் சிவந்து சிகப்புப் புள்ளியுடன் காணப் படும்.

சிகித்ஸை: கடுக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, கோரைக்கிழங்கு, விருச்சி வேர்பட்டை, சீந்திற்கொடி சத்துவம், இவைகளை தேங்காய்பால் விட்டரைத்து மேல் பூசவும். சிறுகாஞ் சூரி வேர் விலாமிச்சைவேர், கோரைக் கிழங்கு, சந்தனம், செஞ் சந்தனம், பர்படகம், நன்னாரி இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது. வாழைக் கிழங்கு, கருவேப்பம் பட்டை, மரமஞ்சள் தோல், கோரைக்கிழங்கு அதிமதுரம், விலா மிச்சை வேர், நன்னாரி வேர் இவைகளின் கஷாயமும் நல்லது. அருகம்புல் தார்தாவல், கருநொச்சி இலை தண்ணீர்விட்டான் கிழங்கு, சீந்திற்கொடி இவைகளின் சாற்றில் திரிபலையைக் கல்க மாக்கிக் கலந்துகொண்டு தைலம்* காய்ச்சித் தேய்த்துக்கொள்ள நல்லது கண்டகி விஸர்ப்பத்தில் கூறப்பட்டுள்ள மற்ற சிகித்ஸை முறைகளையும் இங்கு கையாளலாம்.

---

* தைலம் காய்ச்ச அவரவர்கள் தேகநிலைக்கேற்ப தேங்காய் எண்ணெய்யோ நல்லெண்ணெய்யோ சேர்த்துக்கொள்ளலாம்.

வல்மீக விஸர்ப்பம்

உயர்ந்து சிவந்த வீக்கம் ; அதில் சிவந்தும் வெளுத்துமுள்ள சினப்புகள் ; சினப்புகள் - வட்டமாயும், அரை வட்டமாயும் முக்கோணமாயும் இருந்து கடும் வேதனை அளித்தல் ; உடம்பில் ஒன்பது துவாரங்களிலும் சகிக்க முடியாத வேதனையுடன் சிறிய புண்களும் ; உடல் முழுவதும் எரிச்சலும் ஜ்வரமும் ; இவை இதன் அறிகுறிகள்.

சிகித்ஸை : தானிக்காய் கொட்டையையும், இலுப்பைப் பூவையும் தயிர் தெளிவு விட்டரைத்து மேல் பூசிக்கொண்டே வரவும். ஏகநாயகத்தின் வேர் பட்டையையும் சந்தனத்தையும் தேங்காய் பால் விட்டரைத்துத் தடவலாம்.

நிம்பாமிர்தாதி கஷாயம் : வேப்பம்பட்டை சீந்திற்கொடி, ஆடாதோடை வேர், கோரைக்கிழங்கு, பேய்புடல், முள்ளுக் கத்திரி வேர், கண்டங்கத்திரி வேர், கருங்காலி, பிரமி, எருக்கம் பழுப்பு, அதிமதுரம் இவைகளின் கஷாயத்தை தேன் சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம் அல்லது தேனும் குக்கிலும் மேம்பொடியாகச் சேர்த்துச் சாப்பிடலாம். சுத்தி செய்த சேராங்கொட்டை, வசம்பு, சித்தரத்தை, வாய்விளங்கம், தேவதாரு கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத்திரி வேர், வட்டத்திருப்பி, கோரைக் கிழங்கு, வேப்பம்பட்டை இவைகளின் கஷாயம் குக்கில் அல்லது குக்கிலும் தேனும் அல்லது தேன் அல்லது குக்கிலும் மாசிக்காயும் அல்லது மாசிக்காயும் தேனும், மாசிக்காயும் மேம்பொடி சேர்த்துச் சாப்பிட நல்லது. பிந்துமாலா விஸர்ப்பத்திலும் ஊஷர விஸர்ப்பத்திலும் கூறப்பட்ட சிகித்ஸைகளையும், அஷ்டவல்க தைலத்தையும் உபயோகிக்கலாம்.

ஊஷர விஸர்பம்

எல்லா விடங்களிலும் எரிச்சலுடன் கூடிய வீக்கம், சந்திகளில் கடும் வலி, தாமிர நிறமுள்ள நீளமான முகமுள்ள சினப்புகள், தலை கனம், தலைவலி, முகம் சிவந்துபோதல், காதில் கூச்சல், உடல் தளர்ச்சி, பேச முடியாமை இவைகளுடன் காணும்.

சிகித்ஸை : தேத்தாம் வித்து, நன்னாரி வேர், அதிமதுரம், தானிக்காய் விதை, சீந்திற் சர்க்கரை, மஞ்சிட்டி இவைகளைத் தயிர் தெளிவில் அரைத்துப் பூசலாம். அத்திப்பட்டை, தண்ணீர் விட்டான் கிழங்கு, மரமஞ்சள் தோல், இலுப்பை வைரம், கருங்காலி வைரம், வெட்டி வேர், விலாமிச்சை வேர், கோரைக்கிழங்கு,

வேப்பம்பட்டை, புத்தரிச்சுண்டை வேர், தகர விதை, பர்படகம் இவை ஸம அளவு எடுத்து இவைகள் எல்லாவற்றின் எடைக்கும் பாதி அளவில் முள்ளிலவம் வேர் பட்டை சிற்றுமுட்டி வேர் பேராமுட்டி வேர், பேய்தும்மட்டி வேர் இவைகளைச் சேர்த்துக் கஷாயம் செய்து, தேனும் சர்க்கரையும் கூட்டிச் சாப்பிடவும். இத்திப்பட்டை, சிற்றுமுட்டி வேர், அதிமதுரம், பேய்புடல், விலாமிச்சை வேர், சந்தனம், வெட்டி வேர், கச்சோரம், தண்ணீர் விட்டான் கிழங்கு, கருங்காலிக்கட்டை, கோரைக்கிழங்கு, பர்படகம், பிரமி, சீந்திற்கொடி, அருகம்புல், இலந்தைப்பட்டை, ஏகநாயகத்தின் வேர்பட்டை, வேப்பம்பட்டை, கடுக்காய் தோல், தானிக்காய் தோல், நெல்லிமுள்ளி, வாய்விடங்கம், முள்ளுக் கத்திரிவேர் இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

அக்ஷதாத்ரியாதி தைலம் : தானிக்காய், நெல்லிக்காய், சிற்றுமுட்டி வேர் – இவைகளின் கஷாயம், வெட்டி வேர், கோஷ்டம், கடுக்காய் தோல், விலாமிச்சை வேர், அதுமதுரம் இவை கல்கம், தைலம் காய்ச்சி உபயோகிக்க நல்லது.

படோலாதி தைலம் : பேய் புடல், தென்னம்பூ, தாழை மடல், இவைகளின் சாறு – 4 பங்கு, எண்ணெய் ஒரு பங்கு விருச்சிப்பூச் சாறு ஒரு பங்கு, மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம், நன்னாரி, கச்சோரம், சந்தனம், விலாமிச்சை வேர், இவை கல்கம், தைலம் காய்ச்சி ஸ்னானம் செய்ய நல்லது.

கதிராஸனாதி தைலம் : கருங்காலி வைரம், வேங்கை வைரம், கொம்பரக்கு, நால்பால் மரப்பட்டை இவைகளின் கஷாயம, தேவதாரு, மஞ்சிட்டிப் பொடி சந்தனம், செஞ்சந்தனம், அதிமதுரம் இவை கல்கம், எண்ணெய் காய்ச்சி வடிகட்டி கழுத்துக்குக் கீழுள்ள பாகத்திற்கு நல்லது. ஸ்னானத்திற்கு மரமஞ்சள் போட்டு காய்ச்சின வென்னீர் நல்லது.

கப விஸர்ப்பத்தில்

யவ விஸர்பம்

இரு ஓரங்களிலும் தணிந்தும், நடுவில் தடித்தும், முளை நெல் போன்று வெளுத்தும், வெளுத்த சினப்புகளுடன் கட்டியும் அதிக வலி இல்லாமலும் இருக்கும். உடல் கனத்தல், மறத்துப் போதல் வாந்தி, சுவை உணராமை இவை இருக்கும்.

சிகித்ஸை : ஏக நாயகத்தின் வேர், சதகுப்பை, வசம்பு, இவைகளில் ஒன்றை மோர் விட்டரைத்து அடிக்கடி பூசவும்.

கருங்காலி வைரம், தூணியாங்கம் குங்குமம் இவைகளை தேங்காய் பால் விட்டரைத்தும் பூசலாம். தொடுக்காரை, வெட்பாலேயரிசி, கோரைக்கிழங்கு, பர்படகம், ஏலரிசி, கடுக்காய் தோல், நெல்லி முள்ளி, தானிக்காய் தோல் இவைகளின் கஷாயம் தேனுடன் சாப்பிடலாம் நெல்லிமுள்ளி, கருங்காலி வைரம், முன்னைவேர் பெருங்குரும்பை வேர், திப்பிலி, ஆனைத் திப்பிலி, பேய்த்தும்மட்டி வேர், சீந்திற்கொடி, வேப்பம்பட்டை நிலவேம்பு இவைகளின் கஷாயமும் நல்லது

தாளபத்ராதி தைலம் ; கரும்பனை ஓலை, பேய்த்தும்மட்டி, முசு முசுக்கை, பிரம்பிலை இவைகளின் சாறு, ஏலரிசி, வாய்விளங்கம். வெட்பாலேயரிசி, கார்போகரிசி, குந்துருக்கம், வாலுளுவை, திரி பலை, கொத்துமல்லி விதை ஸரள தேவதாரு இவை கல்கம், எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டி மேல் பூசவும். உள் சாப்பிடவும் உபயோகிக்கலாம்.

கருமுருங்கை இலைச்சாற்றில் சதகுப்பை தேவதாரு திரிபலை சரள தேவதாரு, சந்தனம் இவைகளைக் கல்கமாக்கி எண்ணெய் சேர்த்துக் காய்ச்சிய தைலமும் நல்லது.

தமாலபத்ராதி தைலம் : பச்சிலை, கருநொச்சி இலை, சீந்திற் கொடி, வேங்கையிலை இவைகளின் சாறு, கோஷ்டம், கச்சோரம், ஏலரிசி, வாய்விளங்கம், கோரைக்கிழங்கு செஞ்சந்தனம், தாளிச பத்ரி, சிறுநாகப்பூ இவை கல்கம் – இவைகளைக்கொண்டு எண் ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சித் தலைக்கு ஸ்நானம் செய்விக்க நல்லது. மூங்கில் இலை போட்டுத் தயாரித்த வென்னீரை ஸ்நானத்திற்கு உபயோகிக்கலாம்.

சிம்சபாதி தைலம் : இரிமுள் மரத்தின் வைரத்தின் கஷாயம். மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம் இவை கல்கம், இவைகளைக் கொண்டு தைலம் காய்ச்சி வடிகட்டிக்கொண்டு மேல் தேய்த்து ஸ்நானம் செய்விக்கவும்.

பூர்ஜ ஸாராதி தைலம் : பூர்ஜ மரத்தின் வைரத்தின் கஷாயம், அதே கல்கம் இவைகளைக்கொண்டு தைலம் காய்ச்சி உடல் மேல் தேய்த்துக்கொள்ளலாம்.

அஷ்டவல்க தைலம் தேய்த்துக்கொள்ளலாம். ஸ்நானம் செய்ய விருச்சி இலை, வசம்பு மூங்கிலிலை, நால்பா மரப்பட்டை, முள்குறிஞ்சி வேர் இவைகளைப் போட்டுக் காய்ச்சிய வென்னீர் நல்லது.

துரோண விஸர்பம்

தும்பைப்போல் உருவமும், மேல் வெளுத்தும் உள் சிவந்தும் உள்ள சினப்புடன் கூடியதுமான கரப்பானை துரோண விஸர்பம் என்பர்.

சிகித்ஸை: தும்பைப்பூ, வெட்பாலையரிசி, கொத்துமல்லி விதை இவைகளையோ, வெளுத்த விருச்சி வேரையோ வெம் பாடம் பட்டையையோ நால்பால் மரப்பட்டையையோ தேங்காய் பால் விட்டரைத்துப் பூசலாம். அகில், வேங்கை வைரம், கோரைக்கிழங்கு, சந்தனம், செஞ்சந்தனம், மஞ்சள் சந்தனம், இலுப்பை வைரம் இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் மேம் பொடி சேர்த்துச் சாப்பிடலாம். நிலவாகை வேர், பேய்புடல், இலந்தை மரப்பட்டை, பெருங்குரும்பைவேர், தேவதாரு, பிரமிப் பூண்டு, பேய்த்தும்மட்டி, கோரைக்கிழங்கு, ஏழிலம்பாலைப்பட்டை, சரக்கொன்னை வேர்ப்பட்டை இவைகளின் கஷாயத்தை மாசிக் காயும் தேனும் மேம்பொடி சேர்த்துச் சாப்பிடலாம். வாய் விளங்கம், முன்னை வேர், வட்டத்திருப்பி இவைகளைக் கஷாயம் வைத்து மாசிக்காய் தூளும் தேனும் மேம்பொடியாகச் சேர்த்துச் சாப்பிடலாம். வெண்மருதின் பட்டை, ஏழிலம்பாலைப்பட்டை, மரமஞ்சள் த்தோல், கொன்னைப்பட்டை, பனச்சிப்பட்டை, கஞ்ஞிக் கொட்டகத்தின் தோல், வேப்பம்பட்டை, புத்தரிச்சுண்டை வேர்ப்பட்டை, புங்கம்பட்டை, மணிபுங்கின் பட்டை, ஏகநாயகத் தின் வேர்ப்பட்டை இவைகளைக் கஷாயம் வைத்துத் தேன் மேம் பொடி சேர்த்து உள்ளுக்கு உபயோகிக்கலாம். இந்த கஷாய ஜலத்தையே விட்டுக் குளிக்கலாம். இந்த கஷாயத் திரவியங் களையே அரைத்துக் கலக்கி எண்ணெய் கலந்து தைலம் காய்ச்சி ஸ்னானம் செய்யலாம்.

சாகத்வகாதி தைலம்: தேக்கின் பட்டை, திரிபலை, ஆச்சா மரப்பட்டை, மரமஞ்சள் தோல், நால்பால் மரப்பட்டை இவை களின் கஷாயம், சந்தனம், செஞ்சந்தனம், மஞ்சள் சந்தனம், அம்பாடம் பட்டை, அதிமதுரம், கச்சோரம், ஏலரிசி, வாய் விளங்கம், கம்பில்லகம், திப்பிலி ஆனைத் திப்பிலி, தேவதாரு, கல்பாசி, காவிக்கல், கோரைக்கிழங்கு, இலுப்பை வைரம், ஞாழல் பூ, தகரம் மனோசிலை, குந்துருக்கம், சேங்கொட்டை, பெருங்குரும்பை வேர், ஓமவேர் பட்டை இவை கல்கம். எண் ணெய் சேர்த்துக் காய்ச்சி வடிகட்டி மேல் பூசவும் சாப்பிடவும் உபயோகிக்கலாம்.

யவ விஸர்ப்பத்திற்குக் கூறிய மற்ற சிகித்ஸை முறைகளையும் கையாளலாம்.

வத்ஸக விஸர்பம்

கடினமாயும், வெட்பாலையரிசி போன்று உருவமுடையதாயும் நடுவில் பள்ளமும் சிறிது கருத்தும் வெளுத்துமிருப்பதாயுமுள்ள சினப்புகளுடன் வெண் சிவப்பு நிறத்தில் தடிப்பு ஏற்படும்.

சிகித்ஸை : சரக்கொன்னைப்பட்டை, எருக்கம் பழுப்பு, முன்னை வேர், திரிபலை இவைகளுடன் கூடிய கஷாயம், தேனும் மாசிக்காய் தூளும் சேர்த்துச் சாப்பிட நல்லது. வேப்பம்பட்டை, வேங்கை வைரம், ஏழிலம்பாலை பட்டை, பிரமிப்பூண்டு, கடுகு ரோஹிணி, கோரைக்கிழங்கு, பேய்புடல், வரள் மஞ்சள், மர மஞ்சள் தோல் இவைகளைக் கஷாயமிட்டு மாசிக்காயும் தேனும் மேம்பொடி சேர்த்துச் சாப்பிடலாம்.

ராஜகூஷவகாதி தைலம் : கருந்தும்பை இலை, கருநொச்சியிலை, கல்யாண முருக்கிலை, ஏகநாயக இலை, அருகம்புல், சீந்திலிலை, சிறுவாகையிலை, கஞ்ஞிக்கொட்டத்தினிலை, கையாந்தரை, கருஊங் கிலை, வேங்கை இலை, வன்னியிலை, பிரம்பிலை, பனை ஓலை, அகத்தி, நால்பாமரத்தளிர், தாழை மடல், மகிழ இலை, வேப்பிலை, வெற்றிலை, தாமரை இலை வில்வ இலை முடக்கத்தான், ஊமத்தை இலை, பூவரசன் துளிர் இவைகளை இடித்துப் பிழிந்த சாறு, கச்சோரம், அதிமதுரம், கோரைக்கிழங்கு, சந்தனம், சரள தேவ தாரு, விலாமிச்சை வேர், திப்பிலி, கோஷ்டம், கடுகு, தூணி யாங்கம், நாகணம் மஞ்சிட்டி, கடுகுரோகிணி, ஜீரகம், கருஞ் சீரகம், பெருஞ்சீரகம், ஜாதிக்காய், ஜாதிலிங்கம், கல்பாசி, மனோ சிலை காவி இவை கல்கம் தேங்காய் எண்ணெய் அல்லது நல் லெண்ணெய் இதைத் தைலமாகக் காய்ச்சி வடிகட்டி உள்ளுக்குச் சாப்பிடவும் மேல் பூசவும் உபயோகிக்கலாம். கப விஸர்ப்பங்க ளனைத்திலும் இதை உபயோகிக்கலாம்.

சமீபத்ராதி தைலம் : வன்னி, சீந்தில், அருகு, நெல்லி, கல் யாண முருங்கை இவைகளின் இலைச்சாறு, கோஷ்டம், அதி மதுரம், நன்னாரி, கச்சோரம், சந்தனம், செஞ்சந்தனம், சித்தா முட்டிவேர், ஏலம், லவங்கப்பட்டை, பச்சிலை சிறுநாகப்பூ, தேவ தாரு நெரியரிசிப் பால், வெட்டிவேர், ஒட்டுப்புல், தகரம், வெண் குங்கிலியம் இவை கல்கம், நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடிகட்டி உப யோகிக்கவும்.

ஸ்ஞானத்திற்காக – புல்லானி இலை, நெல்லிக்காய், கருங் காலி வைரம் இவைகளை இட்டுக் காய்ச்சிய வென்னீர் நல்லது. அல்லது இலந்தப்பட்டை போட்டுக் காய்ச்சியதும் நல்லது.

பொதுவான விஸர்ப்ப சிகித்ஸை

மேல் பூச்சுகள் :

1. ஆலம் துளிர், அரசந்துளிர், இச்சித்துளிர், அத்தித் துளிர், கோரைக்கிழங்கு, விருச்சிவேர் பட்டை, கோஷ்டம், அதிமதுரம் இவைகளைத் தயிர் தெளிவில் வேகவிட்டு அரைத்து எல்லா விஸர்ப்பங்களிலும் தடவ நல்லது

2. மஞ்சிட்டி, கோஷ்டம், அதிமதுரம், கொம்பரக்கு, வெம்பாடம் பட்டை, நன்னாரி வேர், முள்ளிலவம்வேர் பட்டை, ஏகநாயக வேர்பட்டை, கடுக்காய், நன்னாரி இவைகளைத் தேங்காய்ப் பாலும் கல்யாண முருங்கிலைச்சாறும் விட்டரைத்துப் பத்துப் போடலாம்.

3. மயிலெள்ளின் பட்டை, திரிபலை, வெள்ளை லோத்திர விதை, வாகை விதை, தானிக்காய் வித்து, நன்னாரி இவைகளைத் தேக்கிலைச்சாற்றில் புழுக்கி வேகவைத்து, அரைத்து நெய்யும் கோழி முட்டையின் வெள்ளைக் கருவும் சேர்த்துத் தேய்த்து சினப்புகளிலுள்ள நீரை வெளியாக்க, வீக்கமும் நீரும் மிகுந்துள்ள விஸர்ப்பங்கள் வடிந்துவிடும்.

உள்ளுக்கு சாப்பிட கஷாயங்கள்

கைசிகிமதுகாதி கஷாயம் : மாசிக்காய், அதிமதுரம், திராக்ஷை, இலுப்பை வைரம், திப்பிலி, பேய் பீர்க்கு வேர், பீர்க்கின் வேர், கோரைக்கிழங்கு, வட்டத்திருப்பி, சிறுகாஞ்சூரி வேர், பர்பாடகம், விருச்சிப்பூ, தென்னம்பாளையரிசி, மரமஞ்சள் தோல் இவைகளைக் கஷாயம் வைத்து கருஞ்சீரகத்தூளும் தேனும் சேர்த்துச் சாப்பிட நல்லது.

அமிருதோசீராதி கஷாயம் : சீந்திற்கொடி, விலாமிச்சைவேர், வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, நிலவேம்பு, ஆடாதோடை, பர்படகம், பெருங்குரும்பை வேர், கொன்னைவேர் பட்டை, கடுக்காய், மஞ்சள், மரமஞ்சள் தோல், ஏழிலம்பாலை பட்டை, கடம்பம் பட்டை, வெள்ளெருக்கு வேரின்மேல் தோல், புங்கம் பட்டை, முள்ளிலவம் பட்டை, கஞ்ஞிக்கொட்ட வேர் பட்டை, நெல்லி முள்ளி, ஏகநாயகத்தின் வேர் பட்டை, நாவல் பட்டை, கல்லால் பட்டை, தும்பைப்பூ, கரப்பான் பட்டை, விருச்சி மொட்டு, மருதம் பட்டை, வாலுளுவை, கார்போகரிசி, ஏலரிசி, வாய்விடங்கம், வெப்பாலையரிசி, வெட்டிவேர், கொத்துமல்லி விதை, சந்தனம், செஞ்

சந்தனம், ஜீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், சுக்கு, பிரம்மிப் பூண்டு, தும்மட்டிவேர், எருக்கின் பழுப்பு, பேய் பீர்க்கு வேர், பீர்க்கு வேர், நன்னாரி, தென்னம்பாளையரிசி, வாகை வைரம், தேத்தான் வித்து, மாசிக்காய், கடுகுரோகிணி, அரேணுகம், பதிமுகம், வசம்பு, வேங்கை வைரம் இவைகளைக்கொண்டு கஷாயம் வைத்து தேனோடு பரங்கிப்பட்டைத் தூளோ, அல்லது இரண்டுமோ சேர்த்து சாப்பிட நல்லது.

தாளீஸபத்ராதி கஷாயம் : தாளீசபத்திரி, பச்சிலை, தானிக்காய், நெல்லிமுள்ளி, கடுக்காய், ஓமம், குரோசாணி ஓமம், கரப்பான்பட்டை, ஜீரகம், கருஞ்சீரகம், பெருஞ்சீரகம், ஏலவாலுகம், நெய்ச்சட்டிப்பூண்டு, விஷ்ணுக்ராந்தி நிலப்பிரண்டை, முடக்கித்தான், பொன்னாங்கண்ணி, கருசலாங்கண்ணி, பயறு, நருந்தாளி (திருதாளி) சீந்திற்கொடி, ஸோமலதா, பூசணிக்கொடி, பேய்புடல், நன்னாரி, மலை நன்னாரிக்கிழங்கு, மாகாளிக்கிழங்கு, வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, தண்ணீர் விட்டான் கிழங்கு, தும்மட்டி வேர், பேய்ச்சுரைவேர், சிறுகாஞ்சூரி வேர், பெருங்குரும்பை, பேய்பீர்க்கு வேர், பீர்க்கம் வேர், கொன்னைப்பட்டை, மாவிலங்கம் பட்டை, வேப்பம்பட்டை, ஏழிலம்பாலை பட்டை, வெம்பாடம் பட்டை, விருச்சிவேர் பட்டை, புல்லாணித்துளிர், முருங்கைத் துளிர், கல்யாணமுருங்கைத் துளிர், அருகம்புல், மாவிலை, மகிழந் துளிர், நந்தியாவர்தைத்துளிர், ஆலந்துளிர், அரசந்துளிர், தாமரைமொட்டு, ஆம்பல்மொட்டு, நெய்தல் மொட்டு, ஞாழல்பூ, சம்பகப்பூ தும்பைப்பூ விருச்சிப்பூ, புரசம்பூ, கிராம்பு, வாய் விளங்கம், கொத்துமல்லி விதை, ஏலரிசி, கார்போக அரிசி, வெட்பாலையரிசி, வாலுளுவை, வாகை வைரம், கருங்காலி, வெண்காலி, சந்தனம், செஞ்சந்தனம், வெண்சந்தனம் இவைகளைக்கொண்டு தயாரித்த கஷாயமோ சீதகஷாயமோ பாண்டமோ தேன் சேர்த்தோ, மாசிக்காயும் தேனும் சேர்த்தோ சாப்பிடலாம் (சீத கஷாயம் என்பது கஷாயத்திற்குள்ள திரவ்யங்களை இடித்து ஜலத்தில் போட்டு ஓரிரவு வைத்திருந்து மறுநாள் காலையில் பிழிந்தெடுப்பதாகும். பாண்டகஷாயம் என்பது கொதிக்கும் வென்னீரில் கஷாய சரக்குகளைப் போட்டு வைத்துச் சிறிது நேரம் கழித்து வடிகட்டிப் பிழிந்து எடுத்துக்கொள்வதாகும்.)

ஸோமவல்லியாதி தைலம் : ஸோமக்கொடி, சீந்திற்கொடி, சிற்றாமுட்டிவேர் இவைகளைக் கஷாயம் வைத்து, சம அளவு தேக்கிலைச்சாறும் சேர்த்து சித்தரத்தை, கருங்காலிவைரம், தக்கோலம், ஞாழல்பூ, சதகுப்பை, சந்தனம், விளாமிச்சைவேர், கோரைக்கிழங்கு இவைகளைக் கல்கமாய் அரைத்துக் கலக்கிக்

காய்ச்சித் தயாரித்த தேங்காய் எண்ணெய்யோ நல்லெண்ணெய்யோ உள்ளுக்குச் சாப்பிடவும். மேல் பூசிக்கொள்ளவும் சிறந்த விஸர்பஹர தைலமாகும்.

பலாசாகத்வகாதி தைலம்: சிற்றுமுட்டிவேர், தேக்கின்பட்டை, கோரைக்கிழங்கு, நன்னாரி வேர், வேங்கை வைரம், வில்வவேர் இவைகளைக் கஷாயமாக்கி, தார்தாவல், அருகம்புல், ஸோமக் கொடி இவைகளின் சாறு சேர்த்து, நிலவாகைவேர், சந்தனம், செஞ்சந்தனம், வெண் சந்தனம், விலாமிச்சை வேர், சம்பக மொட்டு, பெருங்குரும்பை வேர், அதிமதுரம், மஞ்சிட்டி, இலுப்பை வைரம், தகரவிதை, இவைகளைக் கல்கமாக்கி நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெய் சேர்த்துத் தைலம் காய்ச்சி வடி கட்டி உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்க நல்லது.

———

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

ஸ்ரீ :

ஸ்ரீ தந்வந்தரயே நம :

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்

18, சின்னக்கடைத்தெரு, திருச்சி-2.

அங்கத்தினர் விண்ணப்பம்

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

திருச்சி.

ஐயா !

என்னைத் தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தில் அங்கத்தினராகச் சேர்த்துக்கொள்ள வேண்டுகிறேன் மேற்படி மஹா மண்டலத்தின் விதி நியமங்களுக்கு நான் கட்டுப்படுகிறேன். இத்துடன் எனது ...வருஷத்திய அங்கத்தினர் கட்டணமாக ரூபாய் ஐந்து அனுப்பியிருக்கிறேன். அங்கத்தினர், அத்தாட்சிப் பத்திரத்திற்காக தனியாக ரூபாய் இரண்டும் அனுப்பியுள்ளேன்.

தங்கள் உண்மையுள்ள,

கையெழுத்து

பெயர் ______________________________

விசேஷப் பயிற்சி, பட்டம் ______________________________

பதிவு எண், ஆண்டு ______________________________

முகவரி ______________________________

____

____

இம்ப்காப்ஸ்

புராதன பாரம்பரியத்துடன் நவீன தொழில் நுட்பமும் இணைந்து நிற்கும் நிறுவனம்.



இம்ப்காப்ஸ் இந்திய மருத்துவர்களின் இணையில்
லாத ஒரு கூட்டுறவு நிறுவனம். புராதன நூல்
களில் கூறியுள்ள முறைகள், தரங்களை கண்டிப்
பான முறையில் பின்பற்றி ஆயுர்வேத, சித்த,
யூனானி மருந்துகளை அது தயாரித்து வருகிறது.
மருந்துகளை தயாரிக்கும் ஒவ்வொரு கட்டத்திலும்
அதிக கடுமையான முறையில் தரப் பரிசோதனை
செய்யப்படுகிறது புராதன மருந்துகளை தயா
ரிப்பதில் நவீன பாககிங் முறைகளையும் இயந்
திரங்களையும் இம்ப்காப்ஸ் பயன்படுத்தி வரு
கிறது. சுதேச மூலிகைகள் பற்றிய இடைவிடாத
ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள இம்ப்காப்ஸ் புராதன
இந்திய மருந்துகள் சம்பந்தமாக ஒரு மறு
மலர்ச்சியை உண்டாக்கப் பாடுபடுகிறது.

உண்மையான ஆயுர்வேத, சித்த, யுனானி
மருந்துகளுக்கு பெயர் பெற்ற நிறுவனம்

இம்ப்காப்ஸ் மருந்துகள் எல்லா முக்கிய
மருந்து கடைகளிலும் கிடைக்கும்

impcops

இந்தியன் மெடிகல் பிராக்டிஷனர்ஸ் கோவாப்ரேடிவ்
பார்மஸி அண்ட் ஸ்டோர்ஸ் லிட்.
அடையார், சென்னை 20.

விற்பனை நிலையங்கள்: 4/86, மவுண்ட் ரோடு, சென்னை-2. போன்: 8652
48, சொத் மாஸி தெரு, மதுரை. போன்: 30875
16, வெஸ்ட்காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை-14.

maa/IMP/961/M TAM

வைத்ய வாசஸ்பதி

பண்டிட் P. S. ராமசர்மா அவர்களின்

நீண்ட கால பரீக்ஷை அனுபவத்தினால்

கண்டுபிடிக்கப்பட்ட கை கண்ட பலனளிக்கும்

"சக்தி சஞ்ஜீவி"

(REGD)

குழந்தைகளுடைய ஈரல் குலைக்கட்டிகளை

எந்நிலையிலும், போக்குவதிலும்,

வராமல் தடுப்பதிலும் நிகரற்ற ஔஷதம்

எங்கும் கிடைக்கும்.

★

தயாரிப்பவர் :

சக்தி விலாஸ வைத்தியசாலா

கரூர். (S. Ry.)

Edited and published by Dr. T. S. Iswaran, L.I.M., on behalf of the Tamilnad Ayurveda Mahamandalam at 27 Chinnakadai Street, Tiruchirapalli-2
Printed at Githa Press, Tiruchirapalli-2.